**நவம்பர் - 27**

**"எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி விழித்துக்கொண்டிருங்கள். - எபே 6.18.**

நாம் சொல்லுகிற செய்கிற எல்லாவற்றிலும் ஜெபத்தின் ஆவியை உடையவர்களாய் இருக்க வேண்டும். அதாவது அவர் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வகையில் நம்முடைய கைகள் செய்வதற்குக் காண்கிறதை நம்மிடமுள்ள பலத்தோடும் செய்யத்தக்கதாகவும், நாம் தாங்கிக் கொள்ளுவதற்குமேல் ஏற்படுகிற சோதனைகளிலிருந்து நமக்கு அவரால் பாதுகாப்பளிக்கப்படவும் முடிவாக தீயோனின்று விடுவிக்கப்பட்டு நம்முடைய கர்த்தருடைய ராஜ்ஜியத்தில் ஒரு இடத்தைப் பெறத்தக்கதாகவும் ஜீவியதின் எல்லாக் காரியங்களிலும் வழிநடத்தலுக்காக நம்முடைய இருதயம் தொடர்ச்சியாக கர்த்தரிடத்திற்குச் சென்று கொண்டிருக்க வேண்டும். சகோதரரே நம்முடைய கர்த்தர் "நீங்கள் சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று சொல்லியிருக்கிற இந்த வார்த்தைகளை அதிகதிகமாக நினைத்து அப்பியாசிப்போமாக. **- Z ’01, 80 (R 2773).**

இந்த நல்ல காரியங்களுக்காகத் தேவனிடத்திற்குச் செல்லுகிற சொன்ன அல்லது சொல்லப்படாத இருதயத்தின் கபடமற்ற விருப்பமே ஜெபம். இயற்கையான மனிதனுடைய ஆசைகள் தன்னுடைய மானிட வளர்ச்சிக்காக மானிட ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக அவசியமாயிருக்கிறதுபோல, ஜெபம் நம்முடைய அபிவிருத்திக்கு முக்கியமானதாக இருக்கிறது. இந்த ஆசைகள் இல்லாமலிருந்தால் இயற்கையான மனிதன் சீக்கிரம் மரித்துப் போவதுபோல, உண்மையான ஜெபமில்லாமல், புது இருதயமும், மனதும், சித்தமும் செத்துப்போகும். நம்முடைய ஜெபங்கள் வழக்கமானதாக மட்டும் இருக்கக் கூடாது. அவைகள் மனப்பூர்வமானதாயிருக்க வேண்டும். ஏனென்றால், வேண்டிக்கொள்கிற காரியங்கள் ஊக்கமாக விரும்பப்படுகிறவைகளாக இருக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு இணக்கமாக ஏறெடுக்கப்படுகிற ஜெபங்களுக்கு நிச்சயமாக உத்தரவு கிடைக்கும். ஜெபத்தின் உத்தரவுக்காகக் காத்திராமல், நம்முடைய வேண்டுதல்களுக்கு நம்முடைய கர்த்தரின் பதிலைக் கவனிக்க அடிக்கடி தவறிப்போகிறோம். சிலவேளைகளில் அவருடைய உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தாலும் அவைகளைக் கவனிக்கத் தவறிப்போகிறோம். ஏனென்றால், அவர் நாம் வேண்டிக்கொண்டதைக் கொடுப்பதில் தாமதம் செய்கிறார். ஆகையால், இப்படி விடாமல் காத்திருப்பது அவசியமாகிறது. தகுந்த வேளையில் வெகுநாள் நாடின உத்தரவினால் பலனளிக்கப்படுவோம். **- P ’30, 183.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லூக் 11:5-13; 21:36; சங் 5:1-3; 116:1,2; தானி 6:10; அப் 6:4; 10:2,9; ரோம 12:12; பிலி 4:6,7; கொலோ 4:2; 1தெச 5:17; மத் 26:39-44; எபே 1:16; 1தீமோ 5:5.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 182 (R 5707).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் எப்போதும் ஜெபித்தேனா? எவ்வாறு ஜெபித்தேன்? எதற்காக ஜெபித்தேன்? தேவனுடைய பதிலுக்காக விடாப்பிடியாக விழித்திருந்தேனா? பலன் என்ன?**